

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com





பரதக் கலையை அருளிய நடராஜப் பெருமானின் பாதம் பணிந்து எனது நடன அரகேற்றத்தை ஆரம்பிக்கிறேன்.

அன்புடையீர்!

உங்கள் அனைவரையும் எனது பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கு வருக வருகவென இருகரம் கூப்பி வரவேற்கிறேன். உங்கள் வரவால் பெருமிதம் அடைவதுடன் உங்கள் இதயபூர்வமான ஆசீர்வாதத்தையும் எதிர்பார்த்து நிற்கும்,

உங்கள் அன்பு
அன்மீரா



படிப்பகம்

www.padippakam.com



ராதா நடனாலய ஆசிரியர்
"நாட்டிய கலைமணி"
திருமதி. ஞானசுந்தரி வாசன்
அவர்களின் மாணவி
செல்வி. அன்மீரா சிவானந்தம்
அவர்களின்

# பரதநாட்டிய அரங்கேற்றம்

விழாத்தலைவர்
திரு. கா. சிவநாதன்
(கலை பண்பாட்டுக் கழக ஜேர்மன் கிளைப் பொறுப்பாளர்)

பிரதம விருந்தினர்
திருமதி. ராஜினி மோகனராஜ்
"Director of Niruthalaya London"
Diploma in Bharatha Natyam & Nattuwangam

சிறப்பு விருந்தினர்
தமிழீழ விடுதலைப்புலிகள் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர்
திரு. நடராஜா முரளிதரன் அவர்களும் பாரியாரும்

கௌரவ விருந்தினர்
கலைபண்பாட்டுக் கழக சுவிஸ் கிளைப்பொறுப்பாளர்
திரு. பொன்ராசா அன்ரன் அவர்களும் பாரியாரும்

அரங்கேற்ற மண்டபம்
KIRCH GEMEIN DE,
ACRERSTEIN STR - 186,
8049 ZURICH,
HONGG.

காலம்
22.03.1997
சனிக்கிழமை மாலை 5.30 மணி

படிப்பகம்

## குருவின் ஆசியுரை



தெய்வீகக் கலையான பரதநாட்டியம் காலத்தால் மூத்தும் இளமை குன்றாத சிறப்புத் தன்மை வாய்ந்தது. இத்தகைய நடனக்கலையை எனது மாணவி அன்மீரா சிவானந்தம் முறைப்படி பயின்று தனது பத்தாவது வயதில் அரங்கேற்றம் காண இருப்பதை முன்னிட்டு எனது மனம் பூரிப்படைகிறது. கடந்த மூன்றரை ஆண்டுகளாக என்னிடம் பரதநாட்டியம் பயின்று வரும் அன்மீரா சைவத் தமிழ் சங்க மேடைகளிலும், கலை பண்பாட்டுக் கழக மேடைகளிலும், மாவீரர் தின மேடைகளிலுமாக 25 முறைகளுக்கும் அதிகமாக மேடைகள் ஏறி அனைவரது பாராட்டையும் பெற்று எனது நடனாலயத்திற்கு மட்டற்ற புகழைத் தேடித் தந்துள்ளார்.



வயதில் சிறியவளான மீரா அமைதியானவள், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, குரு விஸ்வாசம் நிறைந்தவள். கடினமான உருப்படிகளையும் மிக எளிதாகக் கிரகித்துக் கொள்ளும் தன்மையும் குணச்சித்திரங்களைப் புரிந்து கொண்டு அபிநயிக்கும் தன்மையும் உடையவள் கடுமையான பயிற்சியின் போதும் சலிப்படையாது மிக உறுதியுடன் எனக்கு ஒத்துழைத்து மிகவும் குறுகிய காலத்தில் அரங்கேற்றத்திற்கு தயாராகி இருக்கிறார். சுவிஸ்ஸில் அரங்கேற்றம் காணும் எனது முதல் மாணவி இவரே. பரத நாட்டியத்தில் மட்டுமல்லாது வயலின், புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளை இசைப்பதிலும் பயிற்சி பெற்று வருகிறார். மீராவின் திறமைக்கு அவரது பெற்றோரே மூல காரணமாகும். நாட்டுப்பற்றும் கலை ஆர்வமும் நிறைந்த இவரின் பெற்றோரைப் பாராட்டுவதோடு, மீரா இக்கலைத்துறையில் மென்மேலும் வளர்ச்சி அடைந்து மிகவும் திறமையான நர்த்தகியாக உருவாக வேண்டுமென எல்லாம் வல்ல ஆடலரசனை நடராஜப் பெருமானை வேண்டி எனது இதயபூர்வமான நல்லாசிகளை வழங்குகிறேன்.

"நாட்டியகலைமணி" **திருமதி. ஞானசுந்தரிவாசன்**
Dip in Dance (Bharatham)

www.padippakam.com



## விழாத் தலைவர் வாழ்த்துரை

# விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம்

## யேர்மனிக் கிளை

Tel.: 05523/8608, Postfach 1160, 37441
Bad Sachsa, Germany

**கூண்டுக் கதவுகள் திறக்கும்
கலை நீண்டு சிறகுகள் விரிக்கும்**

பூகோள அமைப்பில் ஏனைய நிலப்பரப்புகளோடு தொடர்பு கொண்ட பூர்வீக விளக்கம், திராவிட நாகரீகம்தான் சிந்துவெளி நாகரீகம் என்று உறுதி செய்து நிற்பதால், அதனை அழித்து எழுத முடியாத நிலையில், தமிழை விழுங்கி தன்னை வெளிப்படுத்தி பொய்யின்மேல் ஒரு மாளிகை கட்டி அரசோச்சுகின்றது வடமொழி. கடல் கொண்டுபோன தமிழர் கலைகளைவிட வடவரால் களவுகொண்டு போன தமிழர் நாகரீகம்தான் அதிகம்.

தமிழ்க்கடவுளரின் பெயர்களே குடமுழுக்குப் போட்டு வடவரால் களவாடப்பட்டுள்ளன.

அம்பல் நகரில் தனித்தமிழ் இறைவி
**பூங்குழல்நாயகி – புஷ்பகூந்தலாம்பிகை ஆனாள்.**
மயிலாடு துறையில்
**மட்டுவார் குழல் நாயகி – சுகந்த கூந்தலாம்பிகை ஆனாள்.**
திருமலைப்பாடியில்
**அழகம்மை – சுந்தராம்பாள் ஆனாள்.**
திருமறைக்காட்டில்
**யாழைப்பழித்தமொழியாள் – வீணாகானவிதுர்ஷ்ணி ஆனாள்.**
**அங்கயற்கண்ணி – மீன்அட்ஷி ஆனாள்.**
**ஆவுடைநாச்சி – கோமதி அம்பாள் ஆனாள்**
**முற்றிலாமுலையாள் – பாலகுஜாம்பிகை ஆனாள்**
**திருமறைக்காடர் – வேதாரண்யர் ஆனார்**
**தாயுமானவர் – மாதுருபூதர் ஆனார்**

கடவுளையே பெயர்மாற்றம் செய்யத் துணிந்தவர்களுக்கு, கலைகள் எம்மாத்திரம். மாதவி ஆடிய தமிழர் நடனம், பரதமான கதை இதுதான்.

தமிழர் நடனத்தைச் சிறைமீட்க தயாராகும் போர்வீரரே பரதத்தை அரங்கேற்றும் இன்றைய கலைஞர்கள்.

பலநூறு ஆண்டுகள் பூட்டப்பட்ட சிறைக்குள்ளே அனைத்துத்தமிழ்க் கலைஞர்களும் அடைபட்டுக் கிடப்பதால் சிறைக்குள் இருந்துகொண்டுதான் சிறையுடைப்புத் திட்டங்கள் தீட்ட வேண்டியுள்ளது.

கூண்டுக்கதவுகள் திறக்கும் என்ற நம்பிக்கையோடு நீண்டு சிறகுகள் விரிக்கும் துணிவு செல்வி அன் மீரா சிவானந்தம் அவர்களிடம் உண்டு.

எமது மேடைகளிற் தோன்றி அடிமை விலங்கொடிக்க கால்பதித்த இவர் தமிழர் நடனத்தின் விலங்குடைக்கும் போராளியாகத் திகழ வாழ்த்துகின்றேன்.

(கா. சிவநாதன்)
பொறுப்பாளர்
விடுதலைப்புலிகள் கலைப்பண்பாட்டுக் கழகம்
யேர்மனிக் கிளை

www.padippakam.com

# திரு. நடராஜா முரளிதரன்

(தமிழீழ விடுதலைப் புலிகள், சுவிஸ் பிரதிநிதி)

## வழங்கிய வாழ்த்துச் செய்தி

இருப்பை இழந்து, முகங்கள் அழிந்து, முகவரிகள் துறந்து புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்துவரும் ஈழத்தமிழர்களாகிய நாம் எமது வாழ்வுக்கான போராட்டம் தமிழீழ தளத்திலே நடந்து வருகையில் அந்தத் தளத்திற்கு அப்பாலும் அது குறித்த பிரக்ஞையுடன் வாழுவது பங்களிப்பது என்ற வகையில் நமது சமகால வாழ்வு பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாக விளங்குகின்றது.

ஆகவேதான் நாம் அரசியல், கலை, இலக்கியம், பண்பாடு என்று பலதரப்பட்ட தளங்களிலே சிந்திக்க வேண்டியவர்களாக, திறனாய்வு நடத்த வேண்டியவர்களாக, ஆற்றலுடன் செயற்பட வேண்டியவர்களாக உள்ளோம். இது தொடர்பாகச் சிந்திக்குமிடத்து புலம் பெயர் நாடுகளிலே எம்மவர் அக்கறை காட்டிடும் கலைகளில் ஒன்றாக பரதக்கலை விளங்குவதை அவதானிக்கலாம். பழம்பெருமை பேசிக் கற்பனையில் இலயித்து வாழ்வதைவிட பரதக் கலையின் மூலம் சமகால நிகழ்வுகளுக்கு அர்த்தம் கொடுப்பதையும், அந்தக் கலைக் கூடாக எமது சிக்கல்களின் தொனிப் பொருளினை உணர்த்துவதையும் சிறப்பாக, செம்மையாகச் செய்ய முடியுமா என்ற வினா தொக்கி நிற்கின்றது. நிறபேதத்தால் தாக்குண்ட ஆபிரிக்கர்களிடமிருந்து புறப்பட்ட, மண்ணை, மானுடத்தை நேசித்த கலைஞர்கள் கலை என்ற கொடுவாளினை கரத்தினிலே தாங்கிப் புதுமையாகப் போராட்டத்தை அகிலத்தின் அனைத்து திக்குகளிற்கும் எடுத்து சென்ற விந்தைதனைப் பார்த்தோம்.

அந்த அனுபவ உண்மைகள் எம்மால் உள்வாங்கப்பட வேண்டும் என்ற உத்வேகத்தோடு செயற்பட்டுவரும் கலைஞர்கள் வரிசையிலே தான் சூரிச் ராதா நடனாலய ஆசிரியை ''நாட்டிய கலைமணி'' திருமதி ஞானசுந்தரி வாசன் அவர்களையும் நோக்குகின்றேன். தான் பிறப்பெடுத்த சமூகம் அவலத்தில் சிக்கி, தாங்கொணாத் துயரங்களினால் அல்லல்படுவதை காணச் சகிக்காது தனது படைப்புகளால் அடக்குமுறைக்கு எதிரான போர்க்குணாம்சத்தை வெளிப்படுத்தும் வகையில் தனது கற்கை நெறிகளைக் கையாண்டு வெற்றி பெற்று வருகின்றார். பரதக்கலையின் அடிப்படைகளையும்; ஆட்ட நேர்த்திகளையும் அவிழ்ந்து குழைந்து அழகியலாகப் பரிணமிக்கும் அர்த்த பாவங்களையும் தமிழீழ விடுதலையின் வெளிப்பாடாக தனித்துவமாக அவர் சமைத்துத் தருவதைப் பார்த்துப் பரவசம் அடைகின்றோம். அந்த வகையில் மனிதநேயம் படைத்த புரட்சிக் கலைஞரான திருமதி ஞானசுந்தரி வாசனின் மாணவியான செல்வி அன்மீரா சிவானந்தம் மண்ணின் நிகழ்வுகளைத் தாங்கிய நடன நிகழ்வுகளில், நாட்டிய நாடகங்களில் அற்புதமாக களிநடனம் புரிந்ததை இரசித்திருக்கின்றேன். சின்னப் பெண்ணாக சிறுநகை புரிந்து தோற்றமளிக்கும் அந்தப் பெண்ணா? இன்று நடன அரங்கேற்றத்திற்கு தயாராகி விட்டாள் என்ற வியப்பு மேலிடுகின்றது. ஆடுகளத்தில் ஆற்றலுடன் அரங்கேறத் துடித்து நிற்கும் செல்வி அன்மீரா சிவானந்தம் நாட்டிய உலகின் உச்சங்களைத் தொடவும், உச்சங்களுக்கூடாக தமிழீழ உணர்வுகளை தட்டியெழுப்பவும் சுவிஸ் வாழ் தமிழீழ மக்கள் சார்பாக நெஞ்சார வாழ்த்தி நிற்கின்றேன்.

நடராஜா முரளிதரன்
(தமிழீழ விடுதலைப்புலிகள்)
சுவிஸ் பிரதிநிதி

படிப்பகம்

www.padippakam.com

"NIRUTHALAYA"
''நிருத்தாலயா''
"Diploma in Bharatha Nathiyam"
and Nattuvangam - Madras

Mrs. RAJINI MOGANRAJ
No.4, TEMPLE ROAD
EASTHAM
LONDON E. 61LU

இசையும் நடனமும் தமிழ் மக்களின் இரு கண்களென ஆன்றோர் கூறுவர்.

பரதநாட்டியக் கலை தமிழ்மக்களின் தெய்வீகக் கலாசாரச் சிறப்பு நடனமாகும். இந் நாட்டியக் கலையின் திருவுருவமே நடராஜப் பெருமான்தான். நடனக் கலையில் உள்ள 108 தாண்டவ மூர்த்திகளையும் நடராஜர் என்னும் பொதுப்பெயர் கொண்டு நாட்டிய உலகம் அழைப்பதை யாவரும் அறிவர். தமிழ் கூறும் நல்லுலகம் நடராஜப் பெருமானை நாட்டியத்துடன் சம்பந்தப் படுத்தி அம்பலக்கூத்தன், ஆடல்வல்லான் கூத்தபிரான் எனக் கூறுவதையும் யாவரும் அறிவர்:

பரதம் என்னும் கலையின் முக்கண்களாக பாவம், ராகம், தாளம் ஆகிய மூன்றும் திகழ்கின்றன. இம் மூன்று தெய்வீகச் சொற்களின் முதல் எழுத்துக்கள் ப,ர,த என்பதையும் இறுதி எழுத்து மூன்றுக்கும் ம் ஆக இருப்பதையும் காணலாம். இந்நான்கு எழுத்துக்களையும் ஒன்று சேர்க்கும் போது பரதம் என்னும் தெய்வீகச் சொல் உருவாகின்றது. காலமாற்றங்களுக்கு அப்பாற்ப்பட்டு பேணிப்பாதுகாத்து மெருகூட்டி வளர்க்கப்பட்ட அழிவற்ற கலை பரதநாட்டியக் கலையாகும். ஆயினும் இடைக்காலத்தில் துரதிஷ்டவசமான பல்வேறுபட்ட சமூக சீரழிவுகளுக்குட்பட்டு பாதிக்கப் பட்டு இழிவுநிலைக்குத் தள்ளப்பட்டு குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் தொழிலாக மட்டுமே கருதப் பட்டு உதாசீனம் செய்யப்பட்டது வருத்தந்தரும் விடயமாகும். இன்று இந்நிலை மாறி வருவதை பரவலாக நடைபெறும் பரதநாட்டிய அரங்கேற்றங்களைக் கொண்டு புரிந்துணரலாம்.

கலைகளிலே மரபுத்தன்மை கொண்டது பரத நாட்டியமாகும். இன்றைய பரதநாட்டியத் துறையில் இடம்பெற்று விளங்கும் பக்தி மரபுகளில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வன தஞ்சாவூர், பந்தநல்லூர், காஞ்சிபுரம் மற்றும் வழுவூர் மரபுகள் என்பனவாகும். இப் பக்திமரபுகள் பரதரின் அடிப்படை ஆட்டமுறை மீது ஆசிரியர்களின் மனோசக்திக்கும் கற்பனைத் திறனுக்கும் அமைய அவ்வவ்வூர்களைச் சேர்ந்த பிரபல நடன ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட உத்தி முறைகளே மரபுகளாகின.

காலத்துக்குக் காலம் பரத நாட்டியக்கலை பல்வேறு உத்திமுறைகளை உள்வாங்கி தன்னைச் சீர்படுத்திக் கொள்வதை இக்கலை பற்றி அறிந்த ஆர்வலர்கள் புரிந்து கொள்வர். இக்கலையில் சில சொற்பிரயோகங்கள் தமிழ் அறிஞர்களின் கருத்துக்களுடன் முரண்படுவதையும் இங்கு நான் குறிப்பிடுவது சிறப்பாகும் எனக் கருதுகின்றேன்.

இன்று நாம் அடவு என்பதை தாளத்திற்கு அமைய ஒரு கை அசைவையும், ஒரு கால் அசைவையும் ஒரு உடல் நிலையினையும் லய சுத்தத்துடன் செய்தல் என்கின்றோம். ஆனால் தமிழ் அறிஞர் கூற்றுப்படி அடவு என்பது ஒரு ஆட்டத்தில் ஓர் இடத்தில் இருந்து இன்னுமொரு இடத்தை அடைவது ஆகும். இதனால் அவர்கள் அடவு என்னும் சொற்பிரயோகம் பிழையானதென்றும் அடைவு என்பதே சரியானதென்றும் கூறுகின்றனர். இப்படிப் பலவித முரண்பாடுகளுக்கூடாகவும் பரத நாட்டியக்கலை நன்கு வளர்ந்து வருவதை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

இவ்வரிய தெய்வீகக் கலையினை என்னுடைய மாணவி சிறு வயது முதல் என்னிடம் சங்கீத சபை பரீட்சைகளில் சித்தி எய்தியவர் பல மேடை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு ஆடிய ஊக்கமும் திறமையும் கொண்ட சிறந்த மாணவி ஞானசுந்தரி வாசன் ஆசிரியையாக இருந்து பயிற்றுவித்தமையை எண்ணும் போது எனக்கு மிகப் பெருமையாக இருக்கிறது. இவர் யாழ் பல்கலைக்கழகம் நுண்கலைப் பீடத்தில் பரதநாட்டியத்தை தொடர்ந்து படித்து ''நாட்டிய கலைமணி'' பட்டம் பெற்றவர். இன்று அரங்கப்பிரவேசம் செய்யவுள்ள சிறுமி அன்மீரா இக் கலையை இத்துடன் கைவிடாது மேலும் கற்று மற்றோருக்கும் இக்கலையைப் பரப்பி குருவுக்கும் பெற்றோருக்கும் பெருமை தேடித் தருவார் என நம்புகிறேன்.

சிறுமி அன்மீரா நடராஜப் பெருமானின் இன்னருள் பெற்று பரதநாட்டியக் கலையில் உலகம் போற்ற சிறந்து விளங்கவேண்டுமென எம்பெருமானை மனமார வேண்டி வாழ்த்து கிறேன்.

– R Moganraj –

படிப்பகம்

www.padippakam.com

# அன்மீராவின் குருபற்றி....

ராதாநடனாலய ஆசிரியை திருமதி. ஞானசுந்தரி வாசன் அவர்கள் யாழ். சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது 7வது வயதில் திருமதி. கிருஷாந்தி இரவிந்திரா அவர்களிடம் பரதநாட்டியம் பயில ஆரம்பித்ததன் மூலம் கலைத்துறையில் அடி எடுத்து வைத்தார். அதன் பின்னர் திருமதி ராஜனி மோகனராஜ் அவர்களிடம் பரதக் கலை நுணுக்கங்களைத் தொடர்ந்து பயின்று கொண்டார்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பயிலும் காலத்திலும் திருக் குடும்பக் கன்னியர் மடம் ஆங்கில பாடசாலையில் (JAFFNA CONVENT) பயிலும் காலத்திலும் தனி நடனங்களிலும், குழு நடனங்களிலும் ''பாற்கடல், தாருகாவனம், சூரசம்ஹாரம், தட்சாயணி கல்யாணம்'' போன்ற நாட்டிய நாடகங்களிலும் பிரதான பாத்திரம் ஏற்று ஆடி அனைவரது பாராட்டையும் பெற்றுச் சிறந்த மாணவியாகத் திகழ்ந்தார்.

இவர் தனது தாயாரிடம் கர்நாடக சங்கீதம் பயில ஆரம்பித்தார். தனது பத்தாவது வயதில் தாயாரை இழந்த பின்னர் தொடர்ந்து திருமதி விஜயலட்சுமி ஸ்ரீனிவாசகம் அவர்களிடம் பயின்றார். திருமதி மலர்தேவி சிவசேகரம் அவர்களிடம் வயலினையும் பயின்று கொண்டார்.

இவ்வாறு பயின்ற கல்வியின் பயனாக வட இலங்கை சங்கீதசபை பரீட்சையில் பரதத்திலும், சங்கீதத்திலும், வயலினிலும் தேர்ச்சி பெற்றார். பின்னர் யாழ், பல்கலைக்கழக நுண் கலைப்பீடத்தில் பயின்ற காலத்தில் குழு நடனங்களிலும் ''திக்குத் தெரியாத காடு'', சக்தி பிறக்கிறது, முதலிய நாட்டிய நாடகங்களிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆண்டு விழாவிலும் பங்கு கொண்டு ஆடினார். யாழ், பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் கல்வியை முழுமைப்படுத்தி ''நாட்டிய கலைமணி'' பட்டம் பெற்றார். (DIPLOMA IN BHARATHANATYAM).

சுவிட்சர்லாந்திற்கு இடம் பெயர்ந்த இவர் ''ராதாநடனாலயம்'' என்ற நடனப்பள்ளியை லுசேர்ன் நகரில் முதலில் ஆரம்பித்தார். பலரின் வேண்டுகோளுக்கிணங்க இந்த நடனாலயத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் சூரிச் நகரிலும் ஆரம்பித்து தனது கலைப் பணியைத் தொடர்ந்து வருகின்றார். இவர் தமிழர் பண்பாட்டை நடனக்கலை மூலம் மிக எளிதாக விளக்கிக் காட்டுபவர் பல கலை நிகழ்ச்சிகளைத் தானும் தனது மாணவிகள் மூலமும் செய்து காண்பித்து கலைக்கும் தாய்நாட்டிற்கும் பெருந் தொண்டாற்றுபவர். இதற்கு எடுத்துக் காட்டாக ''புதியதோர் உலகம், விடுதலை வேள்வி'' முதலிய நாட்டிய நாடகங்களை மாவீரர் தின நிகழ்ச்சிகளில் மேடையேற்றியுள்ளார். கலைப் பண்பாட்டுக் கழக மேடைகளிலும், நவராத்திரி நாட்களிலும் சுவிஸ் நாட்டில் கலை நிகழ்ச்சிகளை நடாத்தி அனைவரது பாராட்டையும் பெற்று வருகின்றார். இவருடைய கலைப் பணி மேலும் தொடரவும் பல இளம் நர்த்தகிகள் உருவாகவும் எல்லாம் வல்ல நடராஜப் பெருமான் துணைபுரிவாராகுக.

திரு. சிவானந்தம்.

படிப்பகம்

www.padippakam.com











படிப்பகம்

www.padippakam.com

# PROGRAMME

## PRAYER

1. PUSHPANJALI
RAGAM - NAATAI
THALAM - AATHI

2. ALARIPPU
RAGAM - NAATAI
THALAM - THISRAEHAM

3. JATHISWARAM
RAGAM - SAVERI
THALAM - RUPAKAM

4. SABDAM
RAGAM - RAGAMALIKA
THALAM - MISRACHAPU

## MUSICAL INTERLUDE

5. VARNAM
RAGAM - THODI
THALAM - AATHI

## INTERVEL

6. PADAM -
(NATHAR MUDI MELIRUKKUM NAGAPAMBAY)
RAGAM - PUNNAGAVARALI
THALAM - AADHI

7. KEERTHANAM (NEE URAIPPAI HANUMANE)
RAGAM - RAGAMALIKA
THALAM - AADHI

8. NAVRASA PADAM
RAGAM - RAGAMALIKA
THALAM - AADHI

9. VERAMANI AIYAR SONG
RAGAM - BEHAK
THALAM - EGAM THISRANADAI

10. THAYAGA NINAIVU

11. KURATHTHY
RAGAM - ANANDAPAIRAVI
THALAM - THISRAM

12. THILLANA
RAGAM - KATHANA KUTHUUKALAM
THALAM - AADHI

13. MANGALAM



படிப்பகம்

www.padippakam.com



## நிகழ்ச்சி நிரல்

### நடராஜர் பூசை

1. **புஷ்பாஞ்சலி - நடராஜர் ஸ்துதி**
   இராகம் - நாட்டை
   தாளம் - ஆதி

2. **அலாரிப்பு**
   இராகம் - நாட்டை
   தாளம் - திஸ்ர ஏகம்

3. **ஜதிஸ்வரம்**
   இராகம் - சாவேரி
   தாளம் - ரூபகம்

4. **சப்தம்**
   இராகம் - இராகமாலிகை
   தாளம் - மிஸ்ரசாபு



### இசைவேளை

5. **வர்ணம்**
   இராகம் - தோடி
   தாளம் - ஆதி

### இடைவேளை

6. **பதம் (நாதர்முடிமேல் இருக்கும் நாகபாம்பே)**
   இராகம் - புன்னாகவராளி
   தாளம் - ஆதி

7. **கீர்த்தனம் (நீ உரைப்பாய் அனுமானே)**
   இராகம் - இராகமாலிகை
   தாளம் - ஆதி

8. **நவரசபதம்**
   இராகம் - இராகமாலிகை
   தாளம் - ஆதி

9. **வீரமணிஐயர் பாடல் (தத்தை கிளியதை)**
   இராகம் - பெஹாக்
   தாளம் - ஏகம் திஸ்ரநடை

10. **தாயக நினைவு**

11. **குறத்தி நடனம்**
    இராகம் - ஆனந்தபைரவி
    தாளம் - ஆதி

12. **தில்லானா**
    இராகம் - கதனகுதூகலம்
    தாளம் - ஆதி

13. மங்களம்



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்துச் செய்தி
# திருமதி. சுசீத்திரா ஜெயபாலன்
## நடன ஆசிரியை

(நாட்டியக்கலா சக்ரவர்த்தி. பத்மஸ்ரீ கே.என். தண்டாயுதபாணி பிள்ளையின் நாட்டியப் பள்ளியிலும் சென்னை அரசினர் கலைக்கல்லூரியிலும் பயின்றவர்)



பரதக்கலை அல்லது நாட்டியக்கலை என்பது ஓர் ஆன்மீகக் கலை எல்லாம் வல்ல தில்லை முதல்வோனின் நிருத்தியத் தோற்றமே இதற்கு சான்று பகரும்.

நடன அரங்கேற்றம் என்பது புனிதமான ஆடற்கலை வாழ்வின் அறிமுக ஆரம்பம். பெருங்காப்பியமான சிலப் பதிகாரத்தில் இளங்கோவடிகள் ''அரங்கேற்றுக் காதை'' என்ற முழு அத்தியாய மூலம் அரங்கேற்றத்தின் சிறப்பினை விளக்குகிறார்.

இன்று அரங்கேறவிருக்கும், செல்வி அன்மீரா சிவானந்தம் தனது ஐந்தாவது வயதில் என்னிடம் மாணவியாகச் சேர்ந்தவர். பயிற்சிகளில் செல்வி. மீரா காட்டிய ஆர்வமும், மிகத் துரிதமாகக் கிரகித்த பணியும், அபிநயலாவகம், அடவு சுத்தம் என்று அவர் காட்டிய வய துக்கு மீறிய திறமைகள் என்னை பிரமிக்க வைத்தன. இவருக்குப் பின்னணியில் நின்று உந்துசக்தியாக விளங்கும் செல்வி. மீராவின் பெற்றோர்கள் திரு.திருமதி சிவானந்தம் அவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவர்கள்.

தொடர்ந்து செல்வி. மீராவிற்கு பயிற்சி அளித்த நண்பியும் நடன ஆசிரியையுமான திருமதி. ஞானசுந்தரி வாசன் அவர்களுக்கு இவ்விழாவில் கிடைக்கப் போகும் விருதுகளும், புகழ்மாலைகளும் அவரின் சிறப்புக்கும் பெருமைக்கும் சான்றாக விளங்கும்.

அரங்கேற்ற விழா சிறப்புற விளங்க எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

வாழ்க பரதக்கலை; முத்தமிழ் வாழ்க வாழியவே.

சுசீத்திரா ஜெயபாலன்
கனடா.

படிப்பகம்

www.padippakam.com

# GRUSSWORT



Raphaela Bittel
Obstgartenstr. 3
8105 Regensdorf

Regensdorf, im Juli 1996

Liebe Anmeera,

Während drei Jahren warst Du bei mir in der Schule. Nun heisst es: "Abschied nehmen", denn für Dich beginnt die Mittelstufenzeit. In unserer Klasse waren 21 kinder aus acht verschiedenen Nationen vertreten. Jedes von Euch Kindern hat seine Kultur den anderen etwas näher gebracht. So habt Ihr auch gelernt, Fremdem genenüber offen zu sein und es anzunehmen.

Von Dir werde ich immer Deine fröhlichen, lustigen Augen in Erinnerung behalten, Deinen Sinn für Schönes, Künstlerisches, aber auch Deine enorme Lernbereitschaft, Aufnahmefähigkeit und Dein Interesse an Neuem.

Ich wünsche Dir und Deiner Familie für Eure Zukunft viel Glück, alles Gute, Gesundheit und viele fröhliche Stunden.

Mit herzlichen Grüssen

படிப்பகம்

www.padippakam.com

## கான பூஷணம்
## ஸ்ரீமதி அம்பிகா தாமோதரம்



இன்றைய அரங்கேற்றத்திற்கு வாய்ப்பாட்டிசை வழங்க இருப்பவர் ஈழத்தைச் சேர்ந்த முன்னணிப் பாடகர்களில் ஒருவரான திருமதி. அம்பிகா தாமோதரம் அவர்கள். இவர் கர்நாடக இசையில் முதலாந்தர டிப்ளமோ பட்டம் பெற்றவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும், ரூபவாஹினி தொலைக் காட்சியிலும் பல ஆண்டுகள் பாடி வந்தவர். நட்டுவாங்கத்தில் அடையார் லக்ஷ்மணனிடம் விசேட பயிற்சி பெற்றவர். உலகிலுள்ள பல நாடுகளில் நூற்றுக்கணக்கான பரதநாட்டிய அரங்கேற்றங்களுக்குப் பாடிய பெருமைக்குரியவர். தற்போது லண்டனில் இசை ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறார்.



## சங்கீத பூஷணம்
## ஸ்ரீமதி கோமளா கந்தையா

இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சிதம்பரத்தில் கர்னாடக இசையில் (வயலின், வாய்ப்பாட்டு) சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர். இவர் இலங்கையில் அரசினர் ஆசிரியராக கடமையாற்றியவர். கடந்த 10 வருடங்களாக பாரீசில் வசித்து வரும் இவர் பல அரங்கேற்ற நிகழ்ச்சிகளுக்கு வயலின் இசைவழங்கி வருகிறார். ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்கும் சென்று பக்கவாத்தியம் வாசிப்பதுடன் பாரீஸில் சிதார் நுண்கலைக் கல்லூரி, அர்ச்சனா கலைக்கல்லூரி ஆகியவற்றின் ஆசிரியராகவும் கடமையாற்றி வருகிறார்.

படிப்பகம்

### லயநாத குணஜோதி முத்துசிவராசா

ஈழத்தில் திருகோணமலையை பிறப்பிடமாகக் கொண்ட திரு. முத்து சிவராசா அவர்கள் அனுபவம் மிக்க மிருதங்க வித்துவான். இவர் திரு. ஆனந்பிரசாத் அவர்களின் மாணவர் ஆவார். வடஇலங்கை சங்கீத சபை ஆசிரியர் தரப்பரீட்சையில் சித்தியடைந்த இவர் ''மிருதங்க நாதமணி'' ''லயநாத குணஜோதி'' என்ற பட்டங்களைப் பெற்று தற்பொழுது லண்டனில் மிருதங்க ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். 8 மாணவர்களுக்கு அரங்கேற்றம் செய்த பெருமைக்குரியவர்.





### திரு. சிவசுப்பிரமணியம் சிவாஜி

திரு. சிவாஜி அவர்கள் நல்லூர் ஆதீன ஆசிரியர் திரு. நமசிவாயம் அவர்களின் மாணவர் ஆவார். சுவிஸ் கலை பண்பாட்டுக் கழகத்தில் நீண்ட காலமாக புல்லாங் குழல் இசை வழங்கி வரும் இவர் குரும்பசிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர்.

### திரு. தங்கமணி கருணாகரன்

கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்ட திரு. கருணாகரன் அவர்கள் தனது தந்தையார் ''கலைமாமணி'' தங்கமணி அவர்களிடம் தபேலா பயின்றவர். சுவிஸ் கலை பண்பாட்டுக் கழகத்திற்கு தபேலா வாசித்து வருகிறார்.



www.padippakam.com

# உளமார நன்றி நவில்கின்றோம்

தெய்விகக் கலையாகிய பரதநாட்டியக்கலையை எமது மகளிற்கு முறைப்படி பயிற்றுவித்து அரங்கேறும் நிலைக்கு கொண்டுவந்து இன்று நட்டுவாங்கமும் செய்த எமது மகளின் ஆடல் குரு வாகிய ராதா நடனாலய ஆசிரியை நாட்டிய கலைமணி திருமதி. ஞானசுந்தரி வாசன் அவர்களிற்கு முதற்கண் நன்றிகள்.

எமது மகளின் ஆடலுக்கு இசைமழை பொழிந்த கானபூஷணம் திருமதி. அம்பிகா தாமோதரம் அவர்களுக்கும், நிகழ்ச்சிக்கு மிருதங்க இசை கொடுத்து மெருகூட்டிய நாதமணி திரு. முத்துசிவராசா அவர்களுக்கும், வயலின் இசை கொடுத்த சங்கீதபூஷணம் திருமதி. கோமளா கந்தையா அவர்களுக்கும், புல்லாங்குழல் இசை கொடுத்த திரு. சிவ சுப்பிரமணியம் சிவாஜி அவர் களுக்கும், தபேலா இசை வழங்கிய திரு. தங்கமணி கருணாகரன் அவர்களுக்கும் எமது நன்றி களும் வணக்கங்களும் உரித்தாகுக. இவ்விழாவிற்கு தலைமை தாங்கி இவ்விழாவினை ஆரம்பித் து வைத்த விடுதலைப்புலிகள் கலைப்பண்பாட்டுக் கழக ஜேர்மன் கிளைப் பொறுப்பாளர் திரு. கா. சிவநாதன் அவர்களுக்கும், எமது அழைப்பை ஏற்று லண்டன் மாநகரில் இருந்து வருகை தந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இவ் அரங்கேற்றத்தினைச் சிறப்பித்து நல் லாசி வழங்கிய திருமதி. ராஜினி மோகனராஜ் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினராகக் கலந்து



கொண்டு எம் செல்வியை ஆசீர்வதித்த விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் திரு. நடராஜா முரளிதரன் அவர்களுக்கும், கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்து நல்லாசி வழங்கிய விடுதலைப்புலிகள் கலைப்பண்பாட்டுக் கழக சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் திரு. பொன்ராசா அன்ரன் அவர் களுக்கும் எமது நன்றிகளும் வணக்கங்களும்.

இவ்விழாவின் ஆரம்பத்தில் பூஜை நடத்திய அர்ச் சகர் திரு. சுந்தரராஜ சர்மா அவர்களுக்கும், தமிழ் அறிவிப் பாளராகக் கடமையாற்றிய திரு. ராஜா அவர்களுக்கும், டொச் மொழி அறிவிப்பாளராகக் கடமையாற்றி திருமதி வனிதா குமார் அவர்க நக்கும் எம் செல்விக்கு உடை அலங் காரம் செய்த திருமதி. நிமலினி ஜெயகுமார் அவர்களுக் கும், இவ் அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற ஒலி, ஒளி அமைப்புச் செய்த திரு. வி.என் தங்கராஜா (குணா) அவர்களுக்கும், வீடியோ படப்பிடிப்பைச் செய்தவர் களுக்கும் குறிப்பிட்ட நாட்களிற்குள் ஆடை அணிகளை பெற்றுத் தந்த நாதன் கடை உரிமையாளருக்கும் வேறு பல வழிகளில் இவ் அரங்கேற்றம் சிறப்புற அமைய நேசக்கரம் கொடுத்துதவியவர்களுக்கும்.

இவற்றிற்கு மேலாக இவ் அரங்கேற்றத்தினை கண்டுகளிக்க வந்து கரகோஷம் செய்து எமது மகளை உற்சாகப்படுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வருக்கும் எமது உளம் நிறைந்த அன்பும் மதிப்பும் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு- திருமதி சிவானந்தம்

www.padippakam.com









படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்